அழகுசாதன - அன்பளிப்பு எவர்சில்வர் பொருள்களையும் கைக்கடிகாரங்களையும் மலிவு விலையில் வாங்க

ஞானம் விற்பனைக் கூடம்
66, சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.
[சி-571]

மக்களின் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

பிளாஸ்ரிக் - எவர்சில்வர் அழகு சாதன அன்பளிப்புப் பொருள்களையும் கைக்கடிகாரங்களையும் தெரிவு செய்ய நாடுங்கள்

ஞானம் விற்பனைக் கூடம்
66, சந்தோசம் தெரு யாழ்ப்பாணம்.
(சி-571)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 29 திங்கட்கிழமை (13 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 106

# சமாதான முயற்சிகளை துரிதப்படுத்தும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்!

## உண்ணாவிரதிகள் மோசமான கட்டத்தில்!

விடுதலைப் புலிகளின் காவலில் 12ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்துவரும் 16 யுத்தக் கைதிகளினதும் உடல் நிலைமை மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

வயிற்றோட்டம், வயிற்றுவலி, தலைசுற்று, சிறுநீரக பாதிப்பு போன்ற உபாதைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

யுத்தக்கைதிகளில் இருவரின் நிலை மிக மோசமாகக் காணப்பட்டது.

அவர்களால் எழுந்து இருக்க முடியாத நிலையில் படுக்கையாக கிடந்தனர்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் டாக்டர் உண்ணாவிரதிகளை நேற்று பரிசோதித்தார். (உ-3)

## அனுருத்த ரத்வத்தைக்கு அவசரக் கடிதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

"எமது உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எமது விடுதலைக்கு உடன் நடவடிக்கை எடுங்கள்".

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள யுத்தக் கைதிகள் இத்தகைய அவசர கோரிக்கை ஒன்றை பாதுகாப்பு பதில் அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கொழும்பிலிருந்து வந்து தம்மைப் பார்வையிட்ட வை. எம். சி. ஏ. அமைப்பின் பிரதிநிதிகள் மூலம் மேற்கண்ட கோரிக்கை அடங்கிய கடிதத்தை யுத்தக் கைதிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

"எமது உடல்நிலை மோசமாகிக் கொண்டு போகிறது; எம்மால் எழும்பி இருக்கக் கூட முடியவில்லை. ஆகவே எமது உயிரைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுங்கள்" என்று அந்தக் கடிதத்தில் அவர்கள் கேட்டுள்ளனர்.

இன்று கொழும்புக்கு திரும்பும் வை.எம்.சி ஏ. அமைப்பினர் அமைச்சரிடம் இக்கடிதத்தைக் கையளிக்கவிருக்கின்றனர். (உ-3)

## அரசிடமிருந்து பதில் ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச். 13

யுத்தக் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்பாக அரசிடம் இருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்று யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தார்.

நேற்று உண்ணாவிரதிகளைப் பார்வையிட்ட அரச அதிபர், அவர்கள் நிலை குறித்து பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வாவுக்கும், ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டிக்கும் தாம் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்ததாகவும்—

ஆனால் பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும்— உண்ணாவிரதிகளிடம் தெரிவித்தார்.

யாழ். வந்துள்ள சிங்கள கிறிஸ்தவ குருமார்களும் உண்ணாவிரதிகளை நேற்று பார்வையிட்டனர். [உ-3]

## பாதுகாப்பு அமைச்சுக்கு உறவினர் படை எடுப்பு!

கொழும்பு, மார்ச் 13

உண்ணாவிரதம் இருக்கும் ஸ்ரீலங்கா யுத்தக்கைதிகளின் பெற்றோர்கள் கொழும்பில் உள்ள தேசிய பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகத்துக்கு படையெடுத்துச் சென்றுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது.

யாழ்ப்பாணம் சென்று தமது பிள்ளைகளைப் பார்வையிட அனுமதி தரும்படி வேண்டியே பெற்றோர்கள் அங்கு சென்றுள்ளனர்.

உண்ணாவிரதிகளின் பெற்றோர் ஜனாதிபதியின் செய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உயரதிகாரிகளுடன் அனுருத்த ஆராய்வு!

கொழும்பு, மார்ச். 13

உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக் கைதிகளின் நிலைமை தொடர்பாக ஸ்ரீலங்கா பதில் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று முன்தினம் பொலீஸ் உயரதிகாரிகளுடன் ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது.

இந்தச் சந்திப்பின் போது ஆராயப் பட்ட விடயங்கள் மற்றும் முடிவுகள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

[உ-7]

## டென்மார்க் மாநாட்டில் பங்குபற்றிய நாடுகளிடம் புலிகள் கோரிக்கை

கொப்பன்ஹேகன், மார்ச் 13

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முன் முயற்சிகளை துரிதப் படுத்தும்படி ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுங்கள்!"

— இவ்வாறு டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடைபெற்ற உலக சமூக அபிவிருத்திக்கான உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகளிடம் விடுதலைப் புலிகள் கோரியிருக்கின்றனர்.

இது தொடர்பாக—

மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை விநியோகித்தனர்.

"சமூக அபிவிருத்தியும் இலங்கை இனநெருக்கடியும்" என்ற தலைப்பிலான இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு. லோறன்ஸ் திலகர் கைச்சாத்திட்டுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையின் வரலாற்றுப் பின்னணியும், தற்போதைய நிலவரங்களும் இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

"சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சிக்கான தமிழர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கக் கோருகிறார் பதில் அமைச்சர்

கொழும்பு, மார்ச் 13

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்காவின் திட்டமிடல், இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு பதில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கோரியிருக்கிறார்.

கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கோரியிருக்கிறார்-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்வசம் வைத்துள்ள திட்டமிடல், இன விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சுக்களின் பிரதி அமைச்சரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் ஈழத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது!

கொழும்பு, மார்ச் 13

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைது செய்யப்படுவோரில் பலர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படாமல் காவலில் வைக்கப்படுவதாகவும் அறியவருகிறது.

1983 வன்செயல்களை அடுத்தும், வடக்கு – கிழக்கு யுத்தத்தை அடுத்தும் தமிழகத்துக்குச்சென்று வீடுகளை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கும் பலரும், கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

இலங்கையிலிருந்து திருமணம் முதலிய பல்வேறு காரணங்களுக்காக தமிழகம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் கோர பஸ் விபத்து! நூறு பேர் வரை கருகி மாண்டனர்!!

### ஸ்ரீபெரும்புதூர் அருகே நேற்று பரிதாப சம்பவம்

சென்னை, மார்ச் 13

சென்னை அருகே நேற்று இடம்பெற்ற கோர வீதிவிபத்து ஒன்றில் சுமார் நூற்றி யிருபது அப்பாவி மக்கள் கருகி மாண்டனர்.

சென்னை — பெங்களூர் நெடுஞ்சாலையில் ஸ்ரீபெரும்புதூர் அருகே செங்குவார் சத்திரப் பகுதியில் நேற்று முற்பகல் 11.30மணியளவில் இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றது.

கல்யாண வீட்டுக் கோஷ்டி ஒன்றை ஏற்றி வந்த டிராக்டர் ஒன்றை பயணிகள் பஸ் ஒன்று கடக்க முற்பட்ட சமயம், எதிரே வந்த எண்ணெய் 'டாங்கருடன்' மோதியது என்றும் —

இந்த மோதலில் எண்ணெய் 'டாங்கர்' வெடித்துச் சிதற, பயணிகள் பஸ்ஸும் டிராக்டரும் தீப் பிழம்பாகி கொழுந்துவிட்டு எரிந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்குக் கருகிக் காணப்பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் ஆட்சியைப் பறிகொடுத்தது காங்கிரஸ்!

### ஒரிஸ்ஸாவில் மட்டும் ராவின் கட்சி வெற்றிவாகை

புதுடில்லி, மார்ச் 13

இந்தியாவில் குஜராத், மகாராஷ்டிரா, ஒரிஸ்ஸா மாநிலங்களில் நடந்த சட்டசபைத்தேர்தல்களில் ஒரிஸ்ஸா தவிர்ந்த மற்றைய இரு மாநிலங்களிலும் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி தோல்வியைச் சந்தித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு வரை வெளியான முடிவுகளின் படி— இரண்டு மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் வெற்றியை நோக்கி முன்னணியில் இருந்தன.

இந்த மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் பிரதமர் நரசிம்மராவுக்கும் அவரது 109 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை என கருதப்படுகிறது. குஜராத்தில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி பாரதீய ஜனதாக் கட்சியிடம் பெரும் தோல்வியைச் சந்திக்கும் நிலையில் இருக்கிறது.

மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவிலும் பாரதீய ஜனதாக் கட்சியும் சிவசேனா கட்சியும் இணைந்த கூட்டணி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் முன் முயற்சிகளில் உலகநாடுகள் நம்பிக்கை

### டென்மார்க் மாநாட்டில் சந்திரிகா

கொழும்பு, மார்ச் 13

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஸ்ரீலங்கா அரசு எடுத்து வரும் முன் முயற்சிகளில் சர்வதேச சமூகம் நம்பிக்கை வைத்திருக்கிறது. இது எமக்கு உற்சாகத்தை அளிக்கின்றது."

— இவ்வாறு டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் நடைபெற்ற சமூக அபிவிருத்திக்கான சர்வதேச உச்சி மாநாட்டில் உரையாற்றும் போது ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

"சமூக நீதி, சமூக அபிவிருத்தி ஆகியவற்றின் மூலமே சமாதானத்தையும் பாதுகாப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சு இழுபடுவதை அரசு அனுமதிக்காது!

### அனுருத்த கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 13

சமாதானப் பேச்சுக்கள் இழுபட்டுப் போவதை அரசாங்கம் விரும்பவில்லை. அதனை அனுமதிக்கப்போவதும் இல்லை.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நீண்ட காலத்திற்குப் பேச்சு நடத்தி அமிழ்ந்து போவதற்கு விரும்பவில்லை.

நாங்கள் யுத்தம் ஒன்றுக்கு தயாராக இருக்க வேண்டி உள்ளது. நாங்கள் போரை விரும்புகிறோம் என்பதல்ல. ஆனால் இப்படியே இழுபட்டுக்கொண்டு போக விரும்பவில்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பதில் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நடத்திய இரவு விருந்து மகாநாட்டின் போது அவர் இவ்வாறு கூறினார் என்று பி.ரி ஐ. செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம். சர்வதேச சமூகம் ஊக்கமளிக்கும் சமிக்ஞை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் முதல் வாரத்தில் அடுத்த கட்டப் பேச்சு?

### சந்திரிகா பரபாவுக்கு கடிதம்

அரசுப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 4 ஆம் கட்டப் பேச்சுக்களை ஏப்ரல் முதல் வாரத்தில் — ஏப்ரல் 2 ஆம் திகதிக்கும் 10 ஆம் திகதிக்கும் இடையில் — நடத்துவதற்கு அரசு விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேற்படி திகதிகளைக குறிப்பிட்டு, அத்திகதிகளுக்குள் அடுத்த கட்டப் பேச்சை நடத்துவதற்கு அரசு தயாராகவுள்ளதென தெரிவித்திருப்பதாக பி. பி. ஸி. சிங்கள சேவையில் அறிவிக்கப்பட்டது (உ-6)

## ஒரே கூண்டில் இடம் தரக்கோரி ஈழத்தமிழ் தம்பதியர் சிறையில் உண்ணாவிரதம்

சென்னை, மார்ச் 13

தமிழகத்தில் உள்ள செங்கல்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களான ருபன் ராஜ் (23வயது), நாகராணி (20வயது) ஆகிய தம்பதிகள் தம்மை ஒரே சிறைக்கூண்டில் விடக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

சிலமாதங்களுக்கு முன்னர் இவர்கள் இருவரும் சிறையிலேயே பதிவுத் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலீஸார் - படையினர் மட்டக்களப்பில் தேடுதல்

### வீடுகளில் சென்று விவரம் சேகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பு, கோட்டைமுனை மற்றும் மண்முனைப் பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை பொலீஸாரும், ராணுவத்தினரும் கூட்டாக சுற்றிவளைப்புத் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

வீடு வீடாகச் சென்று தேடுதல் நடத்திய படையினர் நிரந்தரமாக வசிப்போர், தற்காலிகமாகக் குடியேறியோர் அடிக்கடி வந்து செல்வோர் போன்ற விவரங்களைக் கேட்டறிந்து கொண்டதாக தகவல் தெரிவிக்கின்றன.

இச்சுற்றி வளைப்புத் தேடுதலின்போது வீதிகளில் சென்றோரும் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இத்தேடுதலின்போது எவரும் கைது செய்யப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு - 2 தமிழ்மொழி ஆண்டு 1 - 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G. C. E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8373]

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடம் பொழிப்பும், தொழிற்பாடுப் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6,7,8,9,10,11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8374]

### யாருடையது?

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில், கைக்கடிகாரம் ஒன்று ப. கோகிலா தேவி என்பவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தி. ஜெயக்குமார், பத்திரிகை முகவர், 92, ஐயர் கடை, கொழும்புத்துறையில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (35648)

10-3 95 இல் திருநெல்வேலி அம்மன் சிவன் வீதியில் நேர்சிங்ஹோம் டிஸ்பென்சறிக்கு முன்றோட்டில் கைக்கடிகாரம் கண்டெடுத்துள்ளோம். தவறவிட்டவர்கள் எம்மிடம் வந்து பெற்றுக் கொள்ளவும். பேபி போட்டோ படப்பிடிப்பாளர், இந்து மகளிர் லேன் அருகில், பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (35653)

### ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகள் தீர, நடைபெறும் திருமணம் விரைவில் நடைபெற தொழில்தடை, கல்வித் தடை தீர ஆலோசனை வழங்கப்படும். நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். அதிர்ஷ்ட சாதகம் கணிக்கப்படும். மாவை விநாயகர் ஜோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர் வடக்கு (35617)

### வீனஸ் அன்ரனா

கார் பற்றறி மூலம் 12'' கறுப்பு - வெள்ளை ரி. வியில் ரூபவாஹினி - மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்துதரப்படும். (கார் பற்றறி, 12'' கறுப்பு - வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-397)

### புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில்/ பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (8357)

### பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 3 4,5,6,7,8,9, 10,O/L,A/Lக்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் அல்லது தபாலில் அல்லது பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [8358]

### கமிஷனுக்கு - வெதுப்பகம்

நாவற்குழி - கண்டி வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் சகல வசதிகளுடன் கூடிய வெதுப்பகம் கமிஷன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். செயலாளர், அறவழிப் போராட்டக் குழு, 29, கண்டி வீதி, கைதடி - நுணாவில், சாவகச்சேரி [35629]

### நல்லினக் கோழிக்குஞ்சு

லோமன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-747]

### கனடா நாடகப் பரிசு

கனடா, ரொறன்ரோ ஆகிய வானொலி நிலையத்தின் தமிழ்ப் பிரிவு நடத்திய நாடகப் போட்டியின் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' பூபாலசிங்கம், புத்தகசாலை. [35611]

## செத்தல் மிளகாய் விலை அதிகரிப்பு

அச்சுவேலி, மார்ச் 13

குடாநாட்டில் மிளகாய்ச் செத்தலின் விலை திடீரென அதிகரிக்கத் தொடங்கியுள்ளது கிலோ 180 ரூபா வரை விற்கப்படுகிறது

கடந்த வருடம் இந்தக் காலப்பகுதியில் 100 ரூபாவுக்கு குறைவாக விலை போன செத்தல் இந்த வருடம் 180 ரூபாவாக விற்கப் படுகின்றது.

இந்தவருடம் மிளகாய்ப் பயிர்கள் நோய்தாக்கங்களுக்கு உள்ளாகி உற்பத்தி பாதிப்படைந்திருப்பதால், உள்ளூர் செத்தல் மிளகாயின் விலை மேலும் அதிகரிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

(ஓ-11)

## சேவை நலம் பாராட்டு

### திரு. க. அருந்தவராஜா

சர்வதேச சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையில் கடந்த 25 ஆண்டுகளாக அரும் பணியாற்றி சமூக இசை வாசகத்தில் மேன்மை பெற்று விளங்கும்


திருவாளர் க. அருந்தவராஜா அவர்களின் சேவை அளப்பரியது.

அவரின் பிறந்த நாளாகிய இன்று மேலும் பல ஆண்டுகள் இந்த மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அரும் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ந. அனந்தராஜா, அதிபர்,
பிரதேச ஆணையாளர்,
சென்ஜோன்ஸ் அமபுலன்ஸ் படை,
வடமராட்சி பிரதேசம்.

[8278]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 — 09 — 1918 | 05 — 03 — 1993 |

உயர்திரு
### சோமநாதபிள்ளை கந்தையா
(இளைப்பாறிய ஆசிரியர் - வேலணை)

திதி: 13 – 3 – 1995

ஆண்டிரண்டு கரைந்து விட்டதே .. ஐயா!
நீங்கள் மறைந்து போனது
ஆறிடுமா எம் துயரம் நெஞ்சிலே!
நீங்கிடுமா நின் நினைவுகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சில் வாழும்
எம் தெய்வமே!
நின் பொன்னடிகளை போற்றி
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்;

— குடும்பத்தினர்

32/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(35649)

## ஓராண்டு நினைவு



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 — 06 — 1915 | 08 — 03 — 1994 |

திருமதி
### கனகரத்தினம் இரத்தினம்
(சாவகச்சேரி)

திதி: 13 – 03 – 1995

ஆண்டு ஒன்று கழிந்தாலும்
அரவணைத்த அன்புள்ளம்
என்றும் எமது உள்ளத்தில்
நிலைத்திருக்கும் அம்மா!

மகள். (மல்லிகா தவராஜா),
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கொழும்பு.

(35650)

## இசைக்கச்சேரி

இடம்: நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோயில்.

காலம்: 13 - 03 - 95 இலட்ஷார்ச்சனை

6வது தினமாகிய இன்று மாலை 9 மணிக்கு

பாட்டு: சோ. உமாரமணசர்மா
வயலின்: கோபிதாஸ்
மிருதங்கம்: கண்ணதாஸன்
கடம்: சதாவேல்மாறன்

நன்றி;
விழா உபயகாரர்
சண்முகலிங்கம் மகாதேவன்

[35638]

## கங்கா சியாக்காய் பவுடர்

இன்று மக்கள் மத்தியில்
அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருப்பது
கங்கா சியாக்காய்ப் பவுடர்

கண் குளிர்மைக்கும் கூந்தல் வளர்ச்சிக்கும்
கங்கா சியாககாய்ப் பவுடர்

எங்கும் கேட்டு வாங்கலாம்
மொத்தமாக நீங்கள் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடங்கள்

**பிள்ளையார் பல் பொருள் வாணிபம்**
54, நவீன சந்தை, சுன்னாகம்.

**கங்கா பல் பொருள் வாணிபம்**
பஸ் நிலையம், அச்சுவேலி.

**இலட்சுமி ஸ்ரோஸ்**
பிரதான வீதி, சங்கானை.

தயாரிப்பாளர்;
அனுாமா
தேவாலயவீதி, திருநெல்வேலி.

[35651]

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
### துரைசிங்கம் சரவணன்துரை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27-4-1971 | 13 3-1985 |

அன்புடை பெற்றோரின் ஆலய தீபம் நீ
காலமது சென்றாலும் கனவாகா மைந்தன் நீ
துரையோடு தொடரான சுந்தர தமிழன் நீ
சரவணா நீ என்றும் தனிப்பெரும் புதல்வன் நீ

அன்புப் பெற்றோர்,
அம்மம்மா, பெரியம்மா
குடும்பம்.

நாவற்காடு,
அச்சுவேலி.

(35642)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கனகசபை சிவபாலன்

| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 20 – 05 – 1962 | 11 – 02 – 1995 |

தங்கச் சிவபாலன் எம்மை
தவிக்கவிட்டுச் சென்றனையோ
பங்க மென்ன செய்தீர்;
பாசப்பிள்ளை ஒன்றையும்
அங்க மனையாளையும்
அவதியுற விட்டுவிட்டு
திங்கள் ஒளி மறைந்ததேனோ
தினம் துயரால் வாடுகிறோம்.
ஏங்கி நாம் இங்கிருக்க
ஏற்றம்காண கொழும்படைந்தீர்
நீங்காத உம் முகமோ
நித்தம் எம் கண்முன்னே
தாங்கி நீர் எமைப்பிரிந்து
தூரதேசம் போன தேனோ?
தாங்கவே முடியவில்லை
தங்கமே உம் பிரிவை
தீங்கென்ன செய்தீர் - சிவ
திருவடியைச் சேர்வீர்.

மேற்படி இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்;
தந்தை, மனைவி,
மகன், சகோதரர்கள்.

[8279]

## யாழ்.வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

14 — 3 — 1995 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். மத்தியகல்லூரி மண்டபத்தில் சகல வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும் தற்போதைய அரசியல் நிலைப்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால், சகல வர்த்தகர்களும், ஊழியர்களும் தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள்.

வர்த்தகர்களும், ஊழியர்களும் இக்கலந்துரையாடலுக்கு சமுகம் கொடுக்க வேண்டி இருப்பதால் அன்றைய தினம் பிற்பகல் 2-30 மணியுடன் சகல வணிக நிலையங்களையும் முழுமையாகப் பூட்டி தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச்செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்

[சி/748]

## சுன்னாகம் – தாளையடி ஐயனார் கோயில் 7ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

இன்று 13 – 03 – 1995 திங்கட்கிழமை

★ காலை 7மணி விசேடபூசை
★ தவில் கச்சேரி
இணுவில் கோவிந்தசாமி புதல்வர்கள்
★ பகல் 12-30 மணிக்கு அன்னதானம்
★ மாலை 4-00 மணிக்கு பூசை, தொடர்ந்து வீதி உலா - காராம்பசு வாகனத்தில்
★ இரவு 8-00 மணிக்கு சமயச் சொற்பொழிவு
பொன். கணேசமூர்த்தி
★ இரவு 9-00 மணிக்கு
முத்தமிழ் பட்டிமன்றம்

**'தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி இருப்பது'**

**கவிஞர் கண்ணதாசனின் பாடலிலா?**
எம். எஸ் தயாளன் B. A.
எஸ். கணேசலிங்கம் B. A.
கே. கே. இராஜரட்ணம்

**பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடலிலா?**
கனக. நாகேஸ்வரன் M. A,
செ. சத்தியமூர்த்தி B. Sc.
பக. சிறிபதி
பொன். மதிமுகராஜா J. P.

நடுவர் அ. குமாரவேலு B. A.

★ இரவு 11-00 மணிக்கு
இன்னிசைக் கச்சேரி
'ராஜன்' குழுவினர்

— 7ஆம் திருவிழா உபயகாரர்கள்.

[35652]

## வெளிவந்துவிட்டது!


### சமய மஞ்சரி

சித்திக்கும் ஆன்மீக மாத இதழ்

விற்பனையாளர் தொடர்பு கொள்க:-
ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[சி-620]

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 05 — 1926 | 15 — 03 — 1992 |

அமரர்
### காசிப்பிள்ளை சபாரத்தினம்

திதி: 13 — 03 — 1995

பாசத்தை பொழிந்து நேசத்துடன் எமை -
ஆளாக்கிய பப்பாவே!
ஆண்டு மூன்று ஓடி மறைந்தாலும் - உங்கள்
நினைவிலே திருமுகத்தை கனவில் கண்டு கனத்த -
துயர் தாங்காமல்
காலமெல்லாம் கண்ணீர் வடிய வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்,
உறவினர்கள், நண்பர்கள்.

சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்.

(35654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கடற்படையின் அட்டகாசம்

வடமராட்சிக் கடலில் தமது தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் மூவரை, ஸ்ரீலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். இதற்கு முன்னர் சுழிபுரம் கடற்பகுதியில் தொழில் செய்து கொண்டிருந்த இரண்டு மீனவர்களையும் கடற்படையினர் பிடித்துச் சென்றிருந்தனர்.

இத்தனைக்கும் இந்த ஏழை மீனவர்கள், அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறித் தொழில் புரியவில்லை.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஸ்ரீலங்கா படையின் முகாம் இருக்கும் இடத்திலிருந்து 400 மீற்றர் தூரத்துக்கு அப்பால் மீனவர்கள் தொழில் செய்யலாம் வடமராட்சி நாகர்கோயில் கடற்பகுதி, ஆனையிறவு அல்லது பூநகரி இராணுவ முகாமிலிருந்து பல மைல் தொலைவில் உள்ளது. அதுபோலவே காரைநகர் கடற்படை முகாமுக்கும், சுழிபுரம் கடற்பகுதிக்கும் இடையிலான தூரம் பல மைல்கள்.

அவ்வாறிருக்க, தமது அன்றாடச் சீவியத்துக்காக கடற்பகுதியில் தொழில்புரியும் மீனவர்களை தாக்குவதிலும், அவர்களது தொழில் உபகரணங்களை நாசமாக்குவதிலும், அவர்களைப் பிடித்துச் செல்வதிலும் கடற்படையினர் ஈடுபடுவது ஏன்?

படையினர் தமது எதிரிகளாக நினைக்கும் விடுதலைப் புலிகள் என்று கருதியா இவ்வாறு அடாவடித்தனம் புரிகின்றனர்? இல்லை. சாதாரண பொதுமக்கள், கடலில் தொழில் புரிபவர்கள், நிராயுதபாணிகள் என்பது நன்றாகத் தெரிந்து கொண்டுதான் இவர்கள் போகும் வள்ளங்களை அண்மிக்கிறார்கள்! விடுதலைப் புலிகள் — கடற்புலிகள் — என்றால் கிட்ட நெருங்க அஞ்சுவார்கள்!

மீனவர்கள் மீது அடாவடித்தனம் புரிவதன் மூலம் கடற்புலிகளை மிரட்ட முடியாது என்பதும் ஸ்ரீலங்கா கடற்படையினர் நன்கறிந்ததே. அப்படியாயின் படையினரின் இந்த அட்டூழியத்தின் நோக்கம் தான் என்ன?

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி அதனைச் செல்லுபடியற்றதாக்குவதா? அதன் மூலம் சமாதான முயற்சிகளை குழப்பும் எண்ணமா?

பேச்சுவார்த்தை தோற்றால், போருக்குத் தயாராகுங்கள் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கொடுத்த ''டோஸ்'' கடற்படையினரை இவ்வாறு கொட்டம் அடிக்கச் செய்கிறதா?

தமது தொழிலில் ஈடுபடும் தமிழ்ப்பகுதி மீனவர்களை கடற்படையினர் தாக்குவதும், பிடித்துச் செல்வதும் தொடருமாயின் சமாதானம் பேசும் காலத்துக்கும், முந்திய போர்க் காலத்துக்கும் வித்தியாசம் இல்லாமற் போய்விடும். இதுபெரும் பாரதூரமான விவகாரமாகக் கருதப்பட வேண்டியது.

கடல் வலயத் தடை தளர்த்தப்பட்டு விட்டது; தமிழ்ப் பகுதி மீனவர்கள் இப்போது தமது தொழிலில் தாராளமாக ஈடுபடுகிறார்கள்; வடபகுதியிலிருந்து மீன்வகைகள் வருவதால் கொழும்புச் சந்தையில் விலை குறைந்துள்ளது; என்றெல்லாம் அரசாங்கமும், அரசியல் வாதிகளும், பத்திரிகைகளும் தம்பட்டம் அடிக்கும் வேளையில் —

இங்கே தமிழ் மீனவர்களைப் படையினர் இம்சிப்பது ஏன்?

தமிழ் மக்கள் நலனில் அரசுக்கு உண்மையான அக்கறை இருந்தால், சமாதானத் தேடலில் அது நேர்மையுடன் ஈடுபடுவதாக இருந்தால், படையினரின் இத்தகைய அடாவடித்தனங்களுக்கு விரைந்து உடனடியாக முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

அவ்வாறில்லையெனின், உண்மையை உலகுக்கு எடுத்துச் செல்வதற்காக, வடபகுதி மீனவர்கள் பெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்த வேண்டும். இது விடயத்தில் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒன்று சேர்ந்து திட்டமிட்டுச் செயற்பட வேண்டிய வேளை இது. கடல் வலயத் தடையை முற்றாக நீக்க அரசிடம் வலியுறுத்தவேண்டும்.

### தொலைபேசி அழைப்புகள் மூலம்

## பிரதமரின் செயலாளர் எனக் கூறி பணிப்புரைகள்

### மோசடி குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் செயலாளர் என்று கூறி அவரைப்போல் பாசாங்கு செய்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் உயரதிகாரிகளுக்கு தொலைபேசி மூலமான பணிப்புரைகள் விடுக்கப்பட்டு வரும் சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து—

அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோர் முக்கியமான பொது விடயங்கள் தொடர்பான உத்தரவுகளை தொலைபேசிகள் மூலம்கிடைக்க பெறும் சந்தர்ப்பங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பிரதமரின் செயலாளர், ஹேமசிறி பெர்னாண்டோ சுற்றறிக்கை ஒன்றின் மூலம் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

இத்தகைய தொலைபேசிப் பணிப்புரைகள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-14)

## மாலதி நினைவு நாளில் தமிழீழ மகளிர் தினம்

### ஆண்டுதோறும் அனுஷ்டிக்கப்படும்

வலிகாமம் தெற்கு, மார்ச் 13

இவ்வருடம் முதல் தமிழீழம் எங்கும் தமிழீழ மகளிர் தினம் கொண்டாடப்பட உள்ளது.

தமிழீழ விடுதலைப் போரின் முதல் முதலாக களப்பலியான பெண் போராளி இரண்டாம் லெப்டினன்ட் மாலதி அவர்களின் நினைவு நாளன்று தமிழீழ மகளிர் தினம் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்துடனான போராட்டத்தில் வீரச் சாவைத் தழுவிக் கொண்ட 2 ஆவது லெப்டினன் மாலதியின் நினைவு நாள் ஒக்டோபர் மாதம் பத்தாம் திகதியாகும்.

எனவே, இவ்வருடம் முதல் ஒக்டோபர் 10 ஆம் திகதி தமிழீழ மகளிர் தினம் கொண்டாடப்படும்.

யாழ்ப்பாண மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின விழாவில் இதனைத் தெரிவித்தார். [ஐ-152]

## ரயில்வே ஓய்வூதிய பணிகள் இனி செயலகத்தில் நடக்கும்

நவாலி, மார்ச் 13

யாழ். மாவட்ட ரயில்வே ஓய்வூதியர்களின் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுக்கான செயற்பாடுகள் யாவும் இம்மாதம் முதல் யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதுவரைகாலமும் கொழும்பிலிருந்து வழங்கப்பட்டு வந்த இவர்களது ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாவும் இனிமேல் யாழ் செயலக ஓய்வூதியப் பிரிவின் மூலமே வழங்கப்படும் என்றும் –

சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களை மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு கோவையினை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆவணங்களுடன் நேரில் வரும்படி யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவு கடிதம் மூலம் அவர்களுக்கு அறிவித்துள்ளது. [ஐ-14-100]

## நுகர்வோர் விலைச் சுட்டெண் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 13

பெப்ரவரி மாத கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்தியவங்கி தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரிமாத சுட்டெண் 0.2 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. (ஐ-14)

## புலிகளின் பட்டியலில் எனது பெயரும் உள்ளது

### அமைச்சர் அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு மார்ச் 13

விடுதலைப் புலிகளின் பட்டியலில் எனது பெயர் உள்ளது. அவர்களது மரணதண்டனை ஒருபோதும் எனது பாதையைத் தடுக்கப்போவதில்லை.

துறைமுக கப்பல் துறை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம் எச். எம் அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்.

வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற சாரண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அஞ்சினர்க்கு சதாமரணம் அஞ்சாதவனுக்கு ஒருமரணம் என்று ஜூலியஸ் சீஸர் கூறினார்.

இன்று நான் அடைந்துள்ள அச்சமற்ற உணர்வை எனக்கு ஊட்டியவர்கள் எனது ஆசிரியர்களே. சாதிமத பேதமற்ற சாரணியத்தை நான் மதிக்கிறேன். நான் சாதிமத பேதங்களில் நம்பிக்கை இல்லாதவன். மனிதஜாதியை மட்டுமே மதிக்கின்றேன்.

— இவ்வாறு அஷ்ரப் மேலும் அங்கு தெரிவித்தார். (ஐ-14)

## தமிழக சிறைத் துறைக்கு புதிய இன்ஸ்பெக்டர்

கொழும்பு. மார்ச் 13

தமிழ்நாடு சிறைத்துறையின் புதிய இன்ஸ்பெக்டர் ஜெனரல் பி. காளிமுத்து நியமிக்கப்பட்டார்.

தமிழகச் சிறையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் எனக் கூறப்படும் ஒன்பது பேர் தப்பியதை அடுத்து, அதுவரை சிறைத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பணிபுரிந்து வந்த டி. எஸ். பஞ்சசேயன் பணிமாற்றம் செய்யப்பட்டது தெரிந்ததே. அவரின் இடத்துக்கே காளிமுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

## முன்னாள் பிரதி அமைச்சர் கொலை பற்றி விசாரணை

கொழும்பு, மார்ச் 13

சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக் கட்சி அரசில் பிரதி அமைச்சராகப் பணியாற்றிய ஜனாப் அப்துல் மஜீது 1987 இல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பற்றி விசாரணை நடத்தும்படி அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திருமலை மாவட்ட எம். பியும் அப்துல் மஜீதின் புதல்வருமான ஜனாப் நஜீப் அப்துல் மஜீதிடம் அவரது ஆதரவாளர்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்,

நாட்டில் படுகொலை செய்யப்பட்ட ஏனைய அரசியல் தலைவர்கள் பற்றி விசாரணைகள் நடைபெறும் போது, அப்துல் மஜீத் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி ஏன் விசாரணை நடத்தப்படக்கூடாது என்று மூதூரில் உள்ள சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் கேட்டுள்ளனர். [ஐ-எ]

# அனுருத்தவின் விஜயத்தின் பின் கிழக்கில் படை நடவடிக்கை தீவிரம்!

### புலிகளின் மட்டு., அம்பாறை பொறுப்பாளர் அறிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 13

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்புடனும், கண்ணியத்துடனும் பேணிக் கடைப்பிடித்துவரும் இந்த வேளையில்—

பொறுப்பு வாய்ந்த அரசு தனது சோதனைச் சாவடிகளையும், தளங்களையும் உஷார்படுத்தியுள்ளதுடன், சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளமை மக்களின் அமைதியைக் குலைக்கும் செயலாகும்.

—இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த கடந்த வாரம் ஞாயிறன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அங்கு அவர் மாவட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் மாநாடொன்றை நடத்தினார்.

அதன் பிரதிபலிப்பாகவே தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரதேசத்திலுள்ள மாமாங்கம், புன்னைச் சோலை, புளியந்திவு போன்ற பகுதிகள் அண்மையில் படையினராலும், பொலீஸாராலும் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இவையெல்லாம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

நிலைமைகளின் யதார்த்தத்தை புரிந்துகொண்டு அரசு பொறுப்புடன் நடந்துகொள்ளும் என நம்புகின்றோம்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் வேளையில் இத்தகைய இராணுவ முயற்சிகள் அவசியமா? — என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

அக்கரைப்பற்றில் இருந்து கண்டி மற்றும் கொழும்பிற்குச் செல்லும் வீதிகளில் இராணுவத்தினரின் சோதனைகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பாதைகளில் பல தடை முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும்—

அம்பாறை மாவட்டத்திலும் பல இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டும், விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றன என்றும்—

குறிப்பாக மங்களகம, அரந்தலாவ, மகாஓயா, பதியத்தலாவ ஆகிய இராணுவ முகாம்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்றும் கொழும்பு தமிழ் தினசரி ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-5)

## சபாநாயகர் தலைமையிலான குழுவை புலிகளுடன் பேசுவதற்கு அனுப்புங்கள்

### நாடாளுமன்றில் அஸ்வர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13

''புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசுத் தரப்புப் பிரதிநிதிகளாக சபாநாயகர் கே. பி. இரத்தினாயக்கா, மங்களமுனசிங்க, ஸ்டான்லி திலகரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரை அனுப்புங்கள்''

ஐ. தே. கட்சியின் எம். பியான ஏ. எச். எம். அஸ்வர் சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

வடக்கு சமாதான முயற்சிக்குச் செல்லும் அரச தூதுக் குழுவில் மிகவும் பொறுப்பு வாய்ந்தவர்களையும் நம்பிக்கை தரக்கூடியவர்களையும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

சபாநாயகர் இரத்தினாயக்கா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர். அவர் போன்ற — நம்பிக்கை தருபவர்கள் — அரசு தூதுக்குழுவில் இடம்பெற்றுச் செல்வதை வடபகுதி மக்கள் வரவேற்பர்; புலிகளும் மனமுவந்து வரவேற்பர் என்பதிலும் சந்தேகம் இல்லை.

வடக்கின் புனரமைப்புப் பணிகளுக்காக 3 ஆயிரத்து 900 கோடி ருபா ஒதுக்கியுள்ளீர்கள்.

வடக்கில் முஸ்லிம்கள் இழந்த உடைமைகளைப் புனரமைப்பதற்காக இந்தப் பணத்திலிருந்து எவ்வளவு தொகையைச் செலவு செய்யப் போகிறீர்கள்?

வடக்கில் சேதமுற்றுள்ள முஸ்லிம்களின் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் போன்றவற்றை புனரமைப்புச் செய்யவும் முஸ்லிம்களின் நலனுக்காகவும் அந்த நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டும்.

— இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

## உற்பத்தி எழுச்சி வார போட்டிகள் அடுத்த மாத இறுதியில் நடக்கும்

### பொருண்மிய நிறுவனம் துரித ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 13

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஆண்டுதோறும் நடத்திவரும் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளை இம்முறையும் வெகு சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஏப்ரல் 24ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான இந்த எழுச்சிவார காலப் பகுதி தமிழீழ மண்ணில் வாழும் உழைக்கும் மக்களின் செயல்திறனை வெளிப்படுத்தும் ஓர் உன்னத வாரமாக கொண்டாடப்படும்.

எழுச்சிவாரத்தை முன்னிட்டு நிலம் உழுதல், நிலம் கொத்துதல், துலா மிதித்தல் மாட்டு வண்டிச் சவாரி ஆகிய விவசாயம் சார் போட்டிகளும், நீச்சல், துடுப்பு வலித்தல், பாய்மரம் ஓட்டுதல், வலை பின்னுதல், தண்டு வலித்தல் போன்ற கடல் வளம் சார் போட்டிகளும், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், பனைமரம் ஏறுதல், கூடிய பதனீர் உற்பத்தி ஆகிய பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகளும், கயிறு முறுக்குதல், தும்புத்தடி, கட்டுதல் ஈர்க்குக்கட்டுக் கட்டுதல் போன்ற சிறு கைத்தொழில் போட்டிகளும், வீதி திருத்துதல், வாய்க்கால் திருத்தல், குளம் புனரமைப்பு போன்ற பொதுவான போட்டிகளும் நடத்தப்படவிருக்கின்றன.

எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விண்ணப்பதாரர்கள் அந்தந்த மாவட்ட, கோட்ட, வட்ட, கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக விண்ணப்பப்படிவங்களைப் பெற்று அவற்றை 1-4-95க்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்களும், தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும், கேடயங்களும் இவ்வாண்டு மேதினப் பொதுக்கூட்டத்தில் வைத்து வழங்கப்படும். [ஐ]

## இடம் பெயர்ந்த குடும்ப விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள், உறவினர்களுடனும் வசித்து வரும் இடம் பெயர்ந்தோரின் விவரங்கள் கப்பற்றுறை, துறைமுகங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

அதற்கு வசதியாக ஊர்காவற்றுறை, வேலணை பிரதேசத்தில் இடம் பெயர்ந்தோர், மேற்படி பிரதேச செயலக, கிராம சேவை அலுவலர்களிடம் தமது விவரங்களை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளும்படி ஊர்காவற்றுறை திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-14)

## தெற்கில் மீண்டும் ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 13

''தெற்கில் மீண்டும் ஜே. வி. பி. தலை தூக்குகின்றது''— என்ற தலைப்பில் ''சண்டே ஐலண்ட்'' ஆங்கில வார இதழ் கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளது. [உ]

## மேலதிக செயலராக பெண் நியமனம்

கொழும்பு, மார்ச் 13

சிறிலங்கா நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த திருமதி மாலினி பீரிஸ் பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி மாலினி பீரிஸ் இதற்கு முன்னர் பல [illegible] பதவிகளை வகித்து வந்தார். [ஐ-10]

## அமெரிக்கர் - ரஷ்யர் கூட்டு விண்வெளிப் பயணம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

அமெரிக்க-ரஷ்ய கூட்டு விண்வெளிப்பயணம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மேற் கொள்ளப்படவுள்ளது.

எஸ். டி. எஸ் — 71 என அழைக்கப்படும் இந்தக் கூட்டுத்திட்டத்தின் கீழ் பால்கனூர் விண்வெளி நிலையத்திலிருந்து புறப்படவுள்ள ரஷ்ய ஏவுகணையில் அமெரிக்க மருத்துவரான நோர் மன் தகார்ட்டும் வேறு இரு ரஷ்யர்களும் செல்லவுள்ளனர்.

ரஷ்யாவின் 'மிர்' விண்வெளி நிலையத்தில் 90 நாட்கள் இவர்கள் தங்கியிருந்து ஆய்வுகளை நடத்துவர்.

மருத்துவத்துறை தொடர்பாக தாம் விண்வெளியில் மேற்கொள்ளவுள்ள ஆய்வுகளின் மூலம் பூமியில் வாழும் மக்களுக்கு பலன் கிட்டச் செய்யப்போவதாக திரு. தகார்ட் தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் விண்வெளி ஓடம் ஒன்றில் செல்லவுள்ள முதலாவது அமெரிக்கர் திரு தகார்ட் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-14)

### ஆடைத் தொழிற்சாலையில் இருந்து

## இராணுவ சீருடைத் துணி இரகசிய பொலீஸால் மீட்பு

கொழும்பு, மார்ச் 13

உரிய அனுமதி இன்றி இறக்குமதி செய்யப்பட்ட இராணுவச் சீருடைகள் தயாரிப்பதற்கான உருமறைப்புச் சீருடைத் துணியை ஹோமாகமவில் உள்ள ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றிலிருந்து கொழும்பு துறைமுக இரகசியப் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

11 ஆயிரத்து 600 மீற்றர் உருமறைப்புத்துணி அங்கிருந்து கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பாக அத்தொழிற்சாலை அதிபரும், துறைமுகத்தில் இருந்து அந்தச் சீருடைத்துணியை அப்புறப்படுத்த அனுமதி வழங்கிய சுங்க அதிகாரியும் பொலீஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அது போன்ற சீருடைத் துணிகளைப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி இறக்குமதி செய்ய முடியாது.

ஆனால் இந்தத் துணிகளின் இறக்குமதி தொடர்பான ஆவணங்களில் தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இவ் வகையான துணிகள் இறக்குமதி செய்யப்பட்டதற்கான காரணத்தை தொழிற்சாலை உரிமையாளரால் தெரிவிக்க முடியவில்லை எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் துணிகள் சுங்கப் பரிசோதனைக்கு உள்ளானதா என்பது பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த ஆடைத் தொழிற்சாலை வெளிநாட்டு முதலீட்டாளருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## பொன்னம்பலம் நினைவுக் கூட்டம்

மறைந்த தமிழ் அரசியல் வாதி வி. பொன்னம்பலம் நினைவாக அஞ்சலிக் கூட்டம் ஒன்று நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணி முதல்கொழும்பு ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்தார்.

## புலிகளின் குரல் வானொலியில்

13 — 03 — 1995

**திங்கள் இரவு**

- ★ 8-02 — தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — எங்களின் தேசம்
- ★ 8-30—செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — ''சங்கீத பூசணம் அரியாலையூர் சபாபதிப் பிள்ளை பாலசிங்கத்துடன் செவ்வி

14— 03 — 1995

**செவ்வாய் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலி

### ஒலிபரப்பு

**திங்கள் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30—மாணவர் பக்கம்
- ★ 6-00— சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று

தென்மராட்சி மார்ச் 13

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா தொடர்பான கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்களை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச பதில் விளையாட்டு அதிகாரி க. வைரமுத்து அறிவித்துள்ளார். [ஐ-5-117]

### மனித உரிமைகள் பற்றிய

## கதிர்காமரின் ஜெனீவா உரைக்கு நீலன் பாராட்டு

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரையை தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பியான நீலன் திருச்செல்வம் பாராட்டியுள்ளார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் தாம் எழுதிய கட்டுரையிலேயே அவர் இப் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிறார். [உ]

## தென்மராட்சி பகுதியில் மலேரியா பரவுகிறது

மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவருகிறது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் அனைத்துக் கிராமங்களிலும் மலேரியாக் காய்ச்சல் பரவியுள்ளது. இவற்றுடன் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களும் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலை வார்ட்டுகள் நிரம்பி வெளி விறாந்தைகளில் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற்று வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

## பிரதி அமைச்சர்களுக்கு இனி பொழுதுபோக்குப் படி ரத்து

பிரதி அமைச்சர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் பொழுதுபோக்குப் படியான ஆயிரம் ரூபாவை நிறுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் ராஜாங்கஅமைச்சர்கள் திட்ட அமைச்சர்கள் உட்பட சகல அமைச்சர்களுக்கும் பொழுதுபோக்குப் படி வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இப் படியை நிறுத்துவதற்கான ஆலோசனை ஒன்று நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படியை ஏற்றுக்கொள்ளவதில்லை என தற்போதைய அரசின் அமைச்சர்கள்ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக சபை முதல்வர் ரட்னசிரி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். [ஐ-7]

## ஆலயங்களில்

குருநகர், மார்ச் 13

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம், ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று திங்கட்கிழமை ஏகாதசி தீர்த்தம் சிறப்பாக நடைபெறும். (ஐ-51)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 13

புங்குடுதீவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றுதிங்கட்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு அதிபர் திரு. ந. தர்மபாலன் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

பிரதம விருந்தினராக வேலணை, ஊர்காவற்றுறை கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு நா. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். [ஐ 14]

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி றோ.க.த.க பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ் சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா. கணேசலிங்கம் கலந்து கொள்வார். (உ-ஐ-14-31)

## குஜராத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியை தோற்கடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும் கிழக்கு மாநிலமான ஒரிஸ்ஸாவில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி ஜனதாதளம் கட்சியிடமிருந்து அதிகாரத்தை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### குஜராத்தில்

இந்தியாவின் முன்னணி கைத்தொழில மாநிலமான குஜராத்தில் பாரதீய ஜனதாக் கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்று அமோக வெற்றியீட்டியிருக்கிறது.

மொத்தம் 182 இடங்களுக்கு நடந்த தேர்தலில் இதுவரை வெளியான 176 இடங்களில் பாரதீய ஜனதாவுக்கு 119 இடங்களும் இந்திரா காங்கிரஸுக்கு 44 இடங்களும் கிடைத்துள்ளன.

சுயேச்சையாளர்களும் ஏனைய கட்சி வேட்பாளர்களும் 13 தொகுதிகளில் வென்றுள்ளனர்.

### மகாராஷ்டிரத்தில்

காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான சரத் பவாரின் தலைமையிலான மாநில காங்கிரஸ் அரசு மகாராஷ்டிரத்தில் தோல்வியைத் தழுவும் நிலையை அடைந்திருக்கிறது

அங்கு எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாதபோதிலும் —

ஆகக் கூடிய ஆசனங்களை இந்திரா காங்கிரஸ் தனித்துக் கைப்பற்றியிருந்தாலும் —

ஆட்சி அமைக்கும வாய்ப்பு அக்கட்சிக்குக் கிட்டாது என்று தெரிவிக்கப்பட்டது.

மகாராஷ்டிரத்தில் மொத்தமுள்ள 288 தொகுதிகளில் இதுவரை வெளியான 221 தொகுதி முடிவுகளில் 68 இல் காங்கிரஸ் வென்றுள்ளது. பாரதீய ஜனதா 46 இடங்களிலும் அதன் கூட்டணிக் கட்சியான சிவசேனா 50 இடங்களிலும், ஜனதா தளம் 8 இடங்களிலும், உதிரிக்கட்சிகள் 13 இடங்களிலும் சுயேச்சையாளர்கள் 36 இடங்களிலும் வென்றுள்ளனர்.

பாரதீய ஜனதா — சிவசேனா கூட்டணி, சுயேச்சையாளர்களின் ஆதரவுடன் மகாராஷ்டிரத்தில் ஆட்சி அமைக்கப் போவதாக அறிவித்திருக்கிறது

### ஒரிஸ்ஸாவில்

ஒரிஸ்ஸாவில் மாநில ஆட்சியை ஜனதா தளம் கட்சி, இந்திரா காங்கிரஸிடம் பறிகொடுத்திருக்கிறது.

மொத்தம் 147 இடங்களில் இதுவரை வெளியான 96 இடங்களின் முடிவுகளின்படி 53 இடங்கள் இந்திரா காங்கிரஸுக்கும், ஜனதா தளத்துக்கு 24 இடங்களும் பாரதீய ஜனதாவுக்கு ஏழு இடங்களும் கிடைத்துள்ளன.

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் ஓல்ட் கோல்டஸ் வி.க. அணியினருக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்றும் நாளையும் நண்பகல் 12.00 மணி முதல் மாலை 6 மணி வரை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

## பேச்சு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை காட்டி விடுகிறது.—

விடுதலைப் புலிகள் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். பேச்சுவார்த்தை நடத்துவதில் அரசாங்கமே ஆக்கபூர்வமாக நடந்துகொள்ளவில்லை என்று தமிழ் மக்களுக்கும், உலகத்துக்கும் காட்ட முனைகிறார்கள் — என்றும் அமைச்சர் ரத்வத்த தெரிவித்தார்.

கடந்த வாரம் கிழக்கு மாகணத்தில் உள்ள இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்த போது —

இப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்று காணப்படும் வரை போர் ஒன்று புரிவதற்கு உஷார் நிலையில் இருக்குமாறு இராணுவத்தினரைக் கேட்டுக் கொண்டது தெரிந்ததே. (அ)

## சென்னையில் கோர...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

45 பயணிகள் மற்றும் டிரைவர், கண்டக்டர்களுடன் வந்த—டாக்டர் ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த — பயணிகள் பஸ்ஸே எண்ணெய் டாங்கருடன் மோதுண்டது.

எண்ணெய் டாங்கரில் வந்த பணியாளர்கள் நால்வரும், பஸ்ஸில் வந்த பயணிகளில் பின்கதவால் பாய்ந்து தப்பிய ஒருவரைத் தவிர ஏனையோர் அனைவரும், டிராக்டரில் வந்த சுமார் எழுபது பேரும் அந்த இடத்திலேயே கருகி மாண்டனர்.

டிராக்டரில் வந்த எழுபது பேரில் பெரும்பாலானோர் குழந்தைகளும் பெண்களுமாவர். திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றி விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போதே அவர்களுக்கு இந்தக் கதி ஏற்பட்டது.

தீப்பிடித்து எரிந்து எலும்புக்கூடு போல காட்சியளித்த டஸ் டிராக்டர், டாங்கர் ஆகியவற்றை 'தூரதர்ஷன்' தனது செய்தியில் நேற்றுக் காட்டியது. விபத்து நடந்த இடம் சுடுகாடு போல் காட்சியளித்தது. வீதியின் இருமருங்கிலும் இருந்த மரங்களும் கருகிக்காணப்பட்டன.

விபத்துச் சம்பவம் பற்றிய தகவல் பறந்ததும் ஏழு தீயணைப்புப் படை வண்டிகள் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து வந்து கடும் போராட்டத்தின் பின் தீயை அணைத்தன.

உயிரிழந்தோரின் சடலங்கள் கருகிக் கிடந்ததால் பிரேத பரிசோதனைகள், மரண விசாரணை ஆகியன சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே நடத்தப்பட்டன

விபத்தில் படுகாயமுற்று உயிர் ஊசலாடும் நிலையில் மேலும் பலர் காஞ்சிபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து கேள்விப்பட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதா சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்தார். காயமுற்றோரை ஆஸ்பத்திரியில் அவர் பார்வையிட்டார். இந்தச் சம்பவம் குறித்து பிரதமர் ராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். (உ-7)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

## பொதுச் சபைக் கூட்டம்

காலம்: 15 - 03 - 1995 புதன்கிழமை மாலை 4 00 மணி

இடம்: புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம் (எழிலகம் முன்பாக)

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்,
யாழ். கோட்டம்.

[சி-750]


## 'வரவு' சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் 'வரவு' ஐந்தாவது மலர் வெளியீட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துறைத் தலைவர் திரு. மா. நடராஜசுந்தரம் சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்துவார்.

## முச்சக்கர வண்டிகள் இலவசம்

யாழ்ப்பாணம் மார்ச் 13

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் அங்கவீனர்களுக்கான ஒரு தொகுதி முச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளது.

முச்சக்கர வண்டிகள் அங்கவீனமான இரு பாலருக்கும் வழங்கப் படும் என்றும்—

அவற்றுக்கான விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் யாழ். றோட்டறிக் கழகத் தலைவருக்கு விலாசமிடப் பட்டு இம் மாதம் இருபதாம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்றும்— கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்ணப்பப் படிவங்களை 292/2 நாவலர் வீதியில் பெற்றுக் கொள்ள முடியும். (அ)

## பொருளாதார....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஜனாதிபதி வெளிநாடு சென்றிருப்பதை அடுத்து, அந்த அமைச்சுக்களுக்குப் பொறுப்பான பதவியில் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

வடக்கிற்கு ஸ்ரீலங்கா அரசு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் வழங்கினாலும் இதனால் மக்களே அவலப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசின் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகத்தால் விடுதலைப் புலிகள் எந்தவிதமான பாதிப்புக்களையும் எதிர்நோக்கவில்லை.

— இவ்வாறு அவர் மேலும் கூறியதாக அப் பத்திரிகை தெரிவித்தது. (உ-7)

## தமிழகத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றோரும் பொலிசாரின் கடுமையான விசாரணைக்கு உட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மலையகப் பகுதியிலிருந்து தமிழ்நாடு திரும்பிய தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சிலரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனராம்.

சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து அண்மையில் ஈழத் தமிழ்ப் போராளிகள் ஒன்பது பேர் தப்பி ஓடிய சம்பவத்தைத் தொடர்ந்தே ஈழத் தமிழர் மீதான விசாரணையும் கைதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (அ-7)

## சமாதான ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் கோரிக்கை நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது.

"அரை நூற்றாண்டு கால சமூக மற்றும் அரசியல் அலட்சியம், இனப்பாகுபாடு, அரசியல் ஒடுக்குமுறை அரச பயங்கரவாதம் ஆகியவற்றின் இறுதி விளைவே தமிழர்களின் கோரிக்கையும் இப் போராட்டமும் ஆகும்.

"நாற்பதாயிரத்துக்கும் அதிகமான தமிழர்களைப் பலி கொண்ட — 12 வருட காலப் போரின் பின்னர், வடக்கு—கிழக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சுயாட்சி அமைப்புக்களைக் கொண்டிருக்கும் ஒரு நிலையை தமிழர்கள் இன்று அடைந்திருக்கிறார்கள். இத்தகையதொரு யதார்த்த நிலைதான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது.

தமிழர்களுக்கென தனிநாடு ஒன்றை நிறுவுவதே விடுதலைப் புலிகளின் இலட்சியமாக இருந்து வருகின்ற போதிலும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னெடுத்துள்ள சமாதான முயற்சிகளுக்கு சாதகமான வகையில் விடுதலைப்புலிகள் பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தி செயலிலும் காட்டினார்கள்.

"பன்னிரண்டு வருட காலப் போரினால் சீரழிந்து கிடக்கும் தமிழர் வாழ்வை வழமை நிலைக்கு கொண்டு வர வேண்டும்.

"தற்போதைய மோதல் தவிர்ப்பை நிரந்தரமான போர் நிறுத்தமாக மாற்றி அமைக்க வேண்டும்".

— இவ்வாறு அந்த அறிக்கையில் கோரப்பட்டிருக்கிறது (உ-7)

## அரசி...—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யையும் உறுதிப்படுத்த முடியும்.

"வடக்கு - கிழக்கு நெருக்கடியின் பேரில் பெரும் தொகையான நிதி செலவிடப்பட்டுள்ளது. இது சாதாரண சூழலில் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டிய பணமாகும்

"எனவே சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு இடமளிக்கும் வகையில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது அவசியமாகின்றது.

"வறுமையும் வேலை வாய்ப்பின்மையும் சமுதாய மோதல்கள், வன்முறைகள் ஆகியவற்றுக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

"சுமுகமான சர்வதேச சூழல் நிலவும் பட்சத்தில் மாத்திரமே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான தேசிய முயற்சிகள் வெற்றி பெற முடியும்"— என்றார். [உ-7]

## பாதுகாப்பு--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாளரைச் சந்திக்கச் சென்றபோது அங்கு புறக்கணிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெற்றோரின் கோரிக்கை குறித்து கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் பொலீஸ் மா அதிபர் பிராங் டி சில்வாவிடம் கேட்கப்பட்டது

"யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி கோரி உத்தியோகபூர்வமாக தொடர்பு ஏதும் எம்முடன் வைத்துக் கொள்ளப்படவில்லை. அத்தகைய [illegible] பேசப்படுவது பற்றியும் எனக்குத் தெரியும்." — என்று பொலீஸ் மா அதிபர் [illegible] (உ-7)


## அருந்தவராஜா எங்கள் அருந்தவப் பயனே

25 வருடங்களாக பலன் கருதாப் பல பணிகளைப்புரிந்த திருவாளர்

## க. அருந்தவராஜாவின் பிறந்த நாளாகிய இன்று

உலகம் முழுவதும் வியாபித்துள்ள சர்வதேச சகோதரத்துவ செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை சார்பில் நிறைவுடன் வாழ பிரார்த்திக்கிறோம். தெல்லிப்பழை யூனியன் அன்னையின் சிறந்த அதிபர் I P. துரைரட்ணம் அவர்களிடமும் புகழ்மிகு ஆசிரியர்களிடம் கற்றதையும், சிமெந்து கூட்டுத்தாபனத்தில் தன் கடமைபட்டறிவாலும் சென்ற வருடம் வலிகாமம் வடக்கு - கிழக்கு பிரதேசம் 25,000 மணித்தியாலங்களுக்கு மேல் சிறந்த அவசிய கடமை புரிந்ததை தமிழ் நெஞ்சங்கள் மறக்கவும் முடியுமா.

இவரின் கம்பீரத்தொனி, கண்டிப்பு, கட்டளையிடுதல் ஒழுக்கம், நேர்மை, ஆளுமை இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாக, நற்குடி முறையை பயில பேருதவியாயிற்று. எவரிந்த இரண்டரை தசாப்தங்களில் இவரைப் போல் சேவை செய்தவர்? எத்துறையிலும் கற்பித்தல் திறமை கொண்டு மிளிரும் எங்கள் அருந்தவம், மாணவர்கள் ஆரோக்கியமாக திடகாத்திரமாக வளர்ந்து வர விளையாட்டுத்துறை, யோகப்பியாசம், அணிநடை (தமிழில்) போன்றவற்றில் தன் பொன் பொழுதை அர்ப்பணிக்கின்றார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இருந்து இவரின் உன்னத பணி மிகவும் ஓங்கி வந்தது. இந்திய அமைதிப்படை காலத்தில் இவரின் உதவிகள் வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. திடமுடன் திறம்பட தாய் போல், நோயாளர்களுக்கு உதவி, உயிர்காத்த வள்ளலார் ஓர் முழுமையான அர்ப்பணத்துடன், "உயிர்காக்கும் பணிகளான அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல், முதல் - உதவிபளித்தல், ஏற்ற வைத்தியசாலைக்கு சீக்கிரமே கொண்டு செல்லல், வீதி ஒழுங்கு செய்தல், பராமரித்தல் போன்றவற்றை கிராமம் தோறும் பொலிவுற பலரை தொண்டில் பொருத்தினார். மெய்வருத்தம் பாராது காலை இரவெனப் பேதமின்றி, வருடம் 15,000 மைல்களுக்கு மேல் துவிச்சக்கர வண்டியில் ஓடி உயர்வாகவே செய்தார். அநேக சந்தர்ப்பங்களில் தன் இன்னுயிரையும் பாராது தைரியமாக சாதுரியமாக எங்களுடன் முன்னின்று செயல்படுவார்.

தான் வாழும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக செயல்பட வேண்டும் என்ற உயரிய சிந்தனையால் சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்த நிலையிலும், உள்நாட்டு, வெளிநாட்டு உதவிகளின்றி, பற்றுறுதியுடன் நம்பத்தகுந்தவனாக கடமையில் கண்ணாயிருந்தார். போப்பாண்டவர் ஜோன் போல் II அவர்களின் கொழும்பு விஜயத்தின் போது இவரின் பொறுப்பான கடமை போற்றப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஸ்தாபகர் ஜீன் கென்றி டுனான்ட் அவர்களின் கொள்கைகள், செயல்பாடுகளின் அவசியத்தை உணர்ந்த இவர் யாழ். மாவட்டத்தில் பெரிய அளவில் பரப்ப நடவடிக்கைகள் எடுத்தார். சாரணர் உலகத்திலும் தொடர் சேவையாற்றி வருகின்றார்,

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்"

இன்னல்கள் பல வந்த பொழுதிலும், ஓடாது, தன்னலமற்ற சேவையாற்றினார். எல்லாவற்றிற்கும் மேலாக சிந்தையால் உயர்ந்த உள்ளம் படைத்த இவர் துணைவியார் பிள்ளைகள் எல்லா நிறைவுடன் வாழ பிரார்த்திக்கின்றோம்." இவர் தம் நிலையான பணிகள் ஓங்க நிலமதும் நிதம் அருள வசந்தநாக பூஷணி அம்மனை வேண்டுகின்றோம்.

ஆறுமுகம் கிரிசங்கர் - காங்கேசன்துறை பகுதி அத்தியட்சகர்

முருகையா வதனரூபன் - தெல்லிப்பழை பகுதி அத்தியட்சகர்

நவரட்ணம் நவரஞ்சன் - கோப்பாய் பகுதி அத்தியட்சகர்

[சி-5784]


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் சண்முகம்

(இளைப்பாறிய ஆசிரியர், சரசாலை தெற்கு, சரசாலை)

திரு. மயில்வாகனம் சண்முகம் 11 - 03 - 1995 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் ச. மயில்வாகனம் அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ம. பொன்னையா (ஓய்வு பெற்ற ஆசிரியரும், ஆயுள்வேத வைத்தியரும்), காலஞ்சென்ற ம. சதாசிவம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிகாரி) ம. வைத்திலிங்கம் (ஓய்வு பெற்ற கூட்டுறவு மாவட்ட அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை மாலை (11 - 03 - 1995) நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி.

[சி-74°]

### திருபதி

### நல்லம்மா சின்னத்துரை

திருமதி நல்லம்மா சின்னத்துரை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், ஜெயபத்மினிதேவி, சத்தியபாலன், ஜெயலக்சுமிதேவி, ஜெயச்சந்திரவதனி நீலாவதி, சத்தியானந்தன், சக்திவேல ஆகியோரின தாயாரும், பரமசிவம், நேசதுரை, மதிவதனசோதி, காலஞ்சென்ற கணேஸ்வரன, விக்கிரமசிங்கம், யோகபதி, சிவமலர் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஜெயக்குமார், மற்றும் ஜெயந்தி, சஞ்சீவன் தவப்பிரியா, திவிஜன் ஆகியோரின அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13- 3- 95) திங்கட்கிழமை 11 00மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
சி. சக்திவேல்

50, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(35656)

## மரண அறிவித்தல்

### மு. சுப்பிரமணியம் செல்லமுத்து

காரைநகர் சிதம்பராமூர்த்தி கேணியடியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது 132/2, பிறவுண் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லமுத்து காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா சுப்பிரமணியத்தின் பாரியாரும் வேலாயுதபிள்ளை (கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்), திருஞானசம்பந்தன் (முத்தையா மணியம் கடை புது றோட் சந்தி), அ அன்னலட்சுமி, பூ. சிவஞானம், கை. சரஸ்வதி, இ. பரமேஸ்வரி ஆகியோரின் தாயாரும் —

விஜயலட்சுமி, லீலாவதி, அரசநாயகம், காலஞ்சென்ற பூபாலசிங்கம், கைலாசநாதன், ராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை (14 – 03 - 95) காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
மு.சு. வேலாயுதபிள்ளை
[மகன்]

[35657]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 2[illegible]/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org